மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) தொண்டு நிறுவனங்களுக்கான பராமரிப்பு மானியம் அரையாண்டிற்கொருமுறை அந்தந்த அரையாண்டு முடிவதற்குள் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அநாதை விடுதிகளில் உள்ள மாணவர்களுக்காக அளிக்கின்ற தொகை எவ்வளவு? மாநில அரசு அதற்கு ஈட்டுத் தொகையாக அளிப்பது எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன். மத்திய அரசு அளிக்கின்ற தொகை அளவுக்கு மாநில அரசும் தந்தால் மாணவர்களுக்கு உதவியாக இருக்கும். அந்தந்த மாதம் உதவித் தொகை கொடுப்பது என்று இருக்கிறது. அப்படி அந்தந்த மாதமே கொடுக்காவிட்டாலும், மூன்று மாதத்திற்கு ஒரு முறையாவது அநாதை இல்லங்களுக்கு உதவி செய்ய தொகை வழங்கினால் நன்றாக இருக்கும். அவர்கள் 'ஓவர் டிராப்ட்' வாங்கி வட்டிக் கட்டிக்கொண்டு கஷ்டப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. பல அநாதை இல்லங்களிலே. ஆகவே அரசு அதை கவனித்து அவர்களுக்கு உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அநாதை இல்லங்களில் 12,955 குழந்தைகள் பயன்பெற்று வருகின்றனர். 31–3–1984 வரை மாதம் ஒன்றுக்கு ஒரு குழந்தைக்கு ரூபாய் 76.50 வீதம் பராமரிப்பு மானியம் வழங்கப்பட்டது. 1–4–1984 முதல் மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ள திருத்திய திட்டப்படி தொண்டு நிறுவனங்களுக்கு கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகிறது. உணவு, உடை, சோப்பு, எண்ணெய் போன்றவை வாங்க மாதத்திற்கு, ஒரு குழந்தைக்கு ரூபாய் 150 வீதம் அதிகபட்சமாக வழங்கப்படுகிறது. அதுபோல வாடகை ரூபாய் 40 வீதம் குழந்தை ஒன்றுக்கு வழங்கப்படுகிறது. ஆனால் கட்டிட மானியம் (ரூபாய் 150) வழங்கப்படுகிறபோது (கட்டட) வாடகை மானியம் (மட்டும்) நிறுத்தப்படுகிறது.

சத்துணவு திட்டத்திற்கு வாங்கப்படும் காய்கறிகள்.

77—*(வினா எண் 14985)—திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சத்துணவுத் திட்டத்திற்கு வாங்கப்படும் காய்கறிகள் கூட்டுறவு சங்கம் மூலமாகத்தான் வாங்க வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளதா ?

1987 நவம்பர் 12]

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல காய்கறியும், பசுமையான காய்கறியும் சத்துணவுக் கூடங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக கூட்டுறவுச் சங்கம் மூலமாக காய்கறிகள் வாங்க வேண்டுமென்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

சினிமா தியேட்டர் டிக்கெட்டுகள்.

78—(*வினா எண். 14008) **திரு. த. பழனி :** மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சினிமா தியேட்டர்களில் கொடுக்கும் டிக்கெட்டுகளை துறையே அச்சிட்டுக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரையரங்குகளில் கொடுக்கப்படும் நுழைவுச் சீட்டுகளை துறையே அச்சிட்டுக் கொடுக்கும் செயற் குறிப்பு எதுவும் அரசிடமில்லை.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரையரங்குகளில் கொடுக்கப்படும் நுழைவுச் சீட்டுகளை துறையே அச்சிட்டுக் கொடுக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். இருந்தாலும் திரையரங்குகளை வைத்துக் கொண்டிருப்பவர்கள் ஒவ்வொரு திரையரங்கிலும் 5 ரூபாய், 10 ரூபாய் என்று ஒவ்வொரு டிக்கெட்டுக்கும் மொட்டலாக பெற்றுக்கொண்டு, அங்கே போகிறவர்கள் எங்கே வேண்டுமானாலும் போய் அமரலாம் என்கிற முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய முறை நகர்ப்புறங்களில் அதிக அளவில் இருக்கிறது. அதைத் தடுக்கின்ற திட்டங்கள் அரசிடம் உண்டா? அப்படியானால் இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மொத்தம் 2,249 திரையரங்குகள் இருக்கின்றன. இவைகளில் குறிப்பாக நாள் ஒன்றுக்கு 3 காட்சிகள் என்று வைத்துக் கொண்டாலும் கூட, ஒரு காட்சிக்கு 500 பேர் வந்து படம் பார்க்கிறார்கள் என்று கணக்கிட்டால் தினசரி 33,73,200 டிக்கெட்டுகளை அச்சடித்து தமிழகத்திலே, சென்னையிலேயிருந்து கன்னியாகுமரி வரையுள்ள திரை அரங்குகளுக்கு கொடுக்க வேண்டும். இது அரசினால் சாத்தியமான காரியமல்ல. அதோடு மாத்திரமல்லாமல் அரசுக்கு ஏராளமாக செலவு ஏற்படும். தவிரவும் அரசுக்கு இது பயன் தராது என்கிற காரணத்தால் தான் அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை என்று குறிப்பிட்டேன். அதோடு மட்டுமல்லாமல் இன்றைய தினம் சிறப்பு நகராட்சி, மாநகராட்சி போன்ற இடங்களைத் தவிர்த்து மற்ற இடங்களில் எல்லாம் இணக்க வரி முறையை அமுல்படுத்தி வருகிறோம். அங்கே போலி டிக்கெ